**தடுப்பு அளவீடுகள் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைப்பதற்கான செயற்திட்டம் - 2024**

---

தடுப்பு அளவீடுகள் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைத்தலிற்கான செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டுச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய எல் 0124 ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II (பீ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், பாதுகாப்பு அமைச்சு - இடர் முகாமைத்தவப் பிரிவு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் அமுலாக்கல் முகவராக உள்ளது. காணி முகாமைத்துவத்துடன் ஒண்றிணைந்து கொள்கை மற்றும் பிரமாணத்தின் பௌதீக குறைவு அளவீடு மற்றும் தரமுயர்த்தலின் அமுலாக்கல் ஊடாக நிலச் சரிவுகளிலிருந்து ஆபத்து மற்றும் சேதங்களை குறைப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,396.08 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 101.3 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,528 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 3,868.08 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 21.30 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்கக்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2019 யூலை 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறரினும் செயற்திட்ட பூர்த்தியாக்கல் காலப்பகுதி 2025 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தவிர 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுக்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்கீட்டு குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | SLPSAS 7 இன் 57 ஆம் பிரிவின் பிரகாரம், ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு பகுதியும் தனித்தனியாக மொத்தக் கரயத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் பயன் படுத்தப்பட்ட ரூபா 121.88 மில்லியன் கிரயத்திலான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ஏனைய முதலீடுகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 121.88 | செயற்திட்ட முகாமைத்தவ பிரிவு PMU குழுவின் நாளாந்த செயற்பாடுகளிற்காக சில கணனிகள் மற்றும் தளபாடங்கள் மாத்திரம் பயன்படுத்துகின்றன. ஏனையவை அமுலாக்கல் முகவர் NBRO இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவை அவர்களுடைய ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களாக அந்த விடயங்களை பதியப்பட்டோ/ இனங்கண்டோ இருந்ததுடன் பெறுமானத்தேய்வு நடைமுறையும் மேற்கொள்ளப்படுகின்றது. | SLPSAS உடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இல் 05 இன் 43(அ) இன் பிரகாரம் நிதி நிலமைக் கூற்றின் ஒவ்வொரு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிற்கும் நிதி நிலைமை கூற்றின் திகதியின் இறுதி வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தில் மாற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும், செய்திட்டத்தின் வெளிநாட்டு கடன் தொடர்பில் ரூபா 2,211.91 மில்லியன் தொகையான நாணயவீத சீராக்கல்கள் மேற்குறித்த வேண்டுகை பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2,211.91 | 2024 பெப்ரவரி 28 ஆந் திகதயி 03/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை பிரகாரம் அரச கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கையுடன் இணங்கியொழுகி மீளப்பெறப்பட்டது. | SLPSAS உடன் இணங்கியொழுக வேண்டும் |

## 2.2. சட்டஙகள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டஙகள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019.03.15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கை பிரகாரம் செயற்திட்ட நெறிப்படுத்தல் குழு குறைந்தது இரண்டு மாதங்களிற்கு ஒரு தடவை செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், குழு 2024 ஆம் ஆண்டிற்காக ஒரு தடவை மாத்திரம் கூட்டப்பட்டது. | தவிர்க்க முடியாத காரணங்களால் ஆனது 2020 முதல் 2024 வரையான காலத்தின் பொது ஐந்து கூட்டங்கள் நடாத்துவதற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பிபற்றப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 135(5) | நிதிக் கட்டுப்பாடு தொடரபான செயற்பாடுகள் உத்தியோகத்தர்களிற்கு இடையில் கையளிக்கப்பட வேண்டும். செயற்திட்ட பணிப்பாளர் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்காக செலுத்தப்பட்ட பதிற்கடமை படிகள் தொடர்பான கொடுப்பனவு உறுதிச்சீட்டு நிதிப் பிரமாணத்திற்கு முரணாக அவராலேயெ அனுமதிக்கப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை | நிதிப்பிரமாணம் அறிவுறுத்தல்கள் பிபற்றப்பட வேண்டும். |

## 3. பௌதீக மற்றும் நிதி செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|
| கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 14,528 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் மதிப்பிடப்பட்ட தொகையில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 37.04 சதவீதத்திற்கு சமமான ரூபா 8,486.93 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 29.63 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.செயற்திட்ட முன்னேற்ற அறிக்கை பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 58.32 சதவீம் மற்றும் 55.35 சதவீதமாக இருந்தது. இதன்படி செயற்திட்ட நடவடிக்கை தொடங்கிதிலிருந்து 05 ஆண்டுகளும் 07 மாதங்களும் கடங்த பின்னர் கடன் தொகை பயன்படுத்த முடியுமா எனவும் கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட இறுதி திகதியில் பூர்த்தியாக்க முடியுமா எனவும் கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக உள்ளது. | செயற்திட்டமானது 2027 யூன் 30 வரை நீடித்தல் காலத்தை வேண்டியிருந்ததுடன் அமைச்சர் அனுமதி வழங்கியிருந்ததுடன் அமைச்சரவை அனுமதிக்காக காதிதிருக்கின்றோம். செயற்திட்டமானது அனுமதிக்கப்பட்ட நீடித்தல் காலப்பகுதிக்குள் சகல பணிகள் / நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறாயினும், ஐ.ெ.டொலர் 12 மில்லியன் மீள் பரிந்துரையின் கீழ் புதிதாக பரிந்துரைக்க்கப்பட்ட பொதி 10 இன் 08 சிவில் வேலைகள் ஒப்பந்தங்கள் 2025 யூனில் வழங்கப்பட்டு 2026 யூன் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது 2 ஆவது EOT அடிப்படையில் 2027 யூனில் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி காலப்பகுதி முடிவடையும். | செயற்திட்டத்தின் நோக்கங்கள் குறித்த காலப்பகுதிக்குள் அடையப்பட வேண்டியதுடன் முழுக் கடன் தொகையும் குறித்த செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.2. ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட அமுலாக்கல் பிரிவு ரூபா 1,308.77 மில்லியன் பெறுமதியான 13 வேலைத்தளங்கள் அவர்களால் நிறுவனங்களிற்கு கையளிக்கப் பட்டிருந்த பின்னர் பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண வேலைத் தளங்களின் நிலைபேறான தன்மைக்காக பராமரிப்பு கைநூலினை இறுதி யாக்குவதற்கு எவ்வித படிமுறைகளை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2025 மார்ச் 10 முதல் 2025 மார்ச் 14 வரையான AIIB குழு வருகைதந்திருந்த காலத்தின் போது அவர்களது அறிக்கையிலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. | PMU ஆனது AIIB கருத்துரைகளை பின்பற்றுகின்றதுடன் பராமரிப்பு கைநூலை மீளாய்வு செய்கின்றன. | பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண வேலைத் தளங்களின் நிலைபேறான தன்மைக்காக பராமரிப்பு கைநூலினை இறுதியாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட அமுலாக்கல் பிரிவு பொதி 8 இற்கான பிந்திய நிர்ாண பராமரிப்பு வேலைகளிற்காகவும் வேலைத் தளங்களிற்காக சுமூகமாக பொருட்களை ஏற்றியிறக்க ஒருங்கிணைக்கவும் இலங்கை புகையிரததுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப் பட்டிருக்காததுடன் AIIB குழு வருகைதந்திருந்த காலத்தின் போது இது சுட்டிக்காட்டப்பட்டது. | PMU ஆனது பொதி 8 இற்கான பிந்திய நிர்ாண பராமரிப்பு வேலைகள் தொடர்புபட் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (MoU)' இலங்கை புகையிரதத்திற்கு மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதென துடன் சமர்ப்பிக்கபட்டிருந்ததுடன் 2025.03.04 இல் கருத்துரைகள் பெறப்பட்டது. இதன்படி, MoU கைச்சாத்திடுவதற்கு இலங்கை புகையிரதததிடமிருந்து அனுமதி பெறப்பட்டது. | புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட அமுலாக்கல் கைநூலில் குறிப்பிடப்பட்டவாறு அத்தியாவசிய வசதிகள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களிற்கான கொள்வனவு 2025 சனவரி 31 வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தங்கள் வழங்கலிலுள்ள தாமதங்களின் அவதானிப்புகள் கேள்வி திறத்தல் திகதிக்கும் ஒப்பந்தம் வழங்கல் திகதிக்கும் இடையிலான வித்தியாசங்களை கவனத்திற்கொள்வதால் கணிப்பிடப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் நோக்கம் குறித்த காலப்பகுதிக்குள் அடையப்பட வேண்டும். |

**3.3. கள பரிசோதனைகளின் போது செய்யப்பட்ட அவதானிப்புகள்**

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொதி 5D இன் களப் பரிசோதனையின் போது 14 பிரதான உத்தியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டும், ஒப்பந்தகாரரால் 05 உத்தியோகத்தரை மாத்திரம் ஒதுக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், வேலை தொடங்கிய பின்னர் ஒப்பந்தகாரர் ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு தகுதியுடைய உத்தியோகத்தரை ஒதுக்கியிருக்கவில்லை. மேலும், லொட் இல. 38 அத்தனகல மற்றும் வேலைத்தள இல. 30 மற்றும் 38 இன் ஆரம்ப வரைதல்களிற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. படங்களிற்காக அனுமதி பெறுவதில் தாமதம், செயற்திட்டத்தை பூர்த்தியாக்கலில் தாமதம் ஏற்படக்கூடும் என அவதானிக்கப்பட்டது. | பிரதான உத்தியோகத்தர் களிற்கான தேவைகள் கைச்சாத்திட்ட ஒப்பந்த உடன்படிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தன. அத்தகையவாறு உரிய நடவடிக்கைகள் கைச்சாத்திட்ட ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கமைய எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் நடவடிக்கைள் குறித்த காலப்பகுதிக்குள் அடையப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | களப் பரிசோதானையின் பொது பொருட்களின் 30 ரயில் பெட்டிகள் வட்டவல நிர்மாண இல் 135 ஐ பூர்த்தியாக்குவதற்கு கொண்டுவரப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது ஆனால் அந்த ரயில்கள் தேவையான திகதியில் கிடைத்திருக்ாததுடன் 24 ரயில் பெட்டிகள் மாத்திரமே பெறப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. நிர்மாண வேலைகள் குறித்த காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட முடியாதிருந்தது. | புகையிரத திணைக்களம் பொறியியலாளரால் சான்றுபட்திய பட்டியல் பிரகாரம் ரயில்களை வழங்குவதற்கு இயலாதிருந்தது. இது நிதிட்டமிடப்பட்டவாறு நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதில் தாமதங்களை ஏற்படுத்தியது. | PMU ஆனது திட்டமிட்ட நிர்மாண நடவடிக்கைகள் தாமதமில்லாமல் செயற் திட்டத்தை நிறை வேற்றுவதற்கு நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| (இ) | மேலும், வட்டவல வேலைத் தளத்தில் நிர்மாணிக்கப்பட்ட கால்வாயின் மேற்பகுதி வேகமாக வெள்ளத்தில் அடித்துச் செல்வதையும் கற்களை அகற்றுவகை தடுப்பதற்கும் சுமூகமாக மேற்பகுதியை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தகாரர் குறைபாட்டு அளவீடுகளையும் கையேற்பதற்கு உடனுக்குடன் அறிவுறுத்தப் பட்டிருந்ததுடன் தற்போது பாதிக்கப்பட்ட பகுதிகளில் சகல திருத்தங்களும் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | PMU ஆனது திட்டமிட்ட நிர்மாண நடவடிக்கைகள் தாமதமில்லாமல் செயற் திட்டத்தை நிறை வேற்றுவதற்கு நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| (ஈ) | சுரங்க இல. 33 இல் நடாத்தப்பட்ட களப் பரிசோதானையின் பொது, வனவள திணைக்களத்திற்கு சொந்தமான வனங்களிற்கு ஒதுக்கப்பட்ட வேலைத் தளங்களின் எல்லையிடல் காட்டிற்குள் நுழைவதற்கும் மரங்களை அகற்குவதற்கும் அனுமதி பெறுவதிலுள்ள தாமதம் காரணமாக நிர்மாணங்கள் உரிய நேரத்தில் தொடங்க முடியாதிருந்ததுடன் தாமதப்பட்டிருந்தது. | மாவட்ட அலுவலகலம் நேரொத்த கிரய மதிப்பீடுகளுடன் சேரத்து 40 வெட்டப்பட்ட மரங்களை மீள நடுவதன் மூலம் மரம் அகற்றலிற்கான இழப்பீடுகள் வேண்டப்பட்டதென எங்களிற்கு அறிவிக்கப்பட்டது.<br><br>PMU ஆனது மீள்நடுவதற்கு உடன்பட்டதுடன். மர மீள்நடுகை நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதை முறையாக வேண்டியிருந்தது. தற்போது இந்த நடைமுறை செயற்பாட்டில் உள்ளன. | PMU ஆனது திட்டமிட்ட நிர்மாண நடவடிக்கைகள் தாமதமில்லாமல் செயற் திட்டத்தை நிறை வேற்றுவதற்கு நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

## 3.4. ஏனைய அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 5 ஆண்டுகளும் 07 மாதங்களும் கடந்த பின்னரும் கடன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே, கைதவிர்க்கப்பட்ட மற்றும் கைதவிர்க்கப்படாத கடன் மீதிக்கு கடனளிக்கும் முகவரால் 2024 திசெம்பர் 31 வரை எதிராக ஐ.அ.டொலர் 2,801,831 தொகையான கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் வட்டி சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடனளக்கும் முகவரால் (AIIB) அனுமதிக்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர 2,800,000 மாத்திரதேயாக இருந்ததுடன் செயற்திட்டத்தால் மிகையான 1,831,.83 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டமானது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கையிலிருந்து வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்களை கண்டு பிடித்தது. அத்துடன் ஐ.அ.டொலர் 1,831.33 மிகைக் தொகை தவறாக பதியப்பட்டிருந்ததென 2025-03-18 இல் ERD இற்கு செயற்திட்டம் அறிவித்திருந்தது. செயற்திட்டமானது மேலதிகமாக பதியப்பட்ட தொகையை திருத்தவதற்கு ERD இற்கு அந்த வித்தியாசங்கள் பற்றி தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட செயற்திட்ட நோக்கங்களிற்காக கடன் நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |